RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22s112

OPEN ACCESS

# சேலம் செம்மனூர் நகரச்செட்டியார் இனமக்களின் வாழ்வியல் சடங்குகள் - இனவரைவியல் ஆய்வு

ச. ரம்யா [அ, *]

[அ] தமிழ்த்துறை, பெரியார் பல்கலைக்கழகம், சேலம்- 636011, தமிழ்நாடு, இந்தியா.

# Salem Semmanur Nagara Chettiayar's Cultural Rituals – Ethnographical Research

S. Ramya [a, *]

[a] Department of Tamil, Periyar University, Salem–636011, Tamil Nadu, India.

* Corresponding Author: ramyasathiyamoorthi88@gmail.com

Received: 13-03-2021
Revised: 24-01-2022
Accepted: 26-01-2022
Published: 02-02-2022

Check for updates

## ABSTRACT

In ethnic social life each race has its differences due to the environment in which they live. Some common customs are found in all communities. Transition in cultural life is natural. It is human nature to set each of the transitions in relation to a ritual. Salem Chemmanur Chettiars perform biological rituals during each transition. Human life is characterized by various transitions from birth to death. Rituals and beliefs are found in every community. Putting the sugar water on the baby at birth is seen as a ritual. These rituals are performed according to the developmental stage of the child as he or she grows to a certain size, such as a hemisphere rope around the waist. Such rituals are common among the girl child and some other rituals are performed as she grows up. Women perform the flowering ritual during flowering. Booppu ritual is seen as a defilement ritual. Poop is the first menstrual period. The flower is a sign that the woman has become fertile. This event is considered as an important transformation of life. Like this, wedding ceremonies are considered to be the primary transition ceremony. Death rites are the final event of human life. Various such rituals are observed in the lives of the Chettiars of Salem Semmanur.

**Keywords:** Rituals, Subtraction, Maternity, Menstruation, Business, Baby Shower.

## முன்னுரை

மனிதர்கள் சமூகமாக வாழத் தொடங்கிய நிலையில் வெவ்வேறு சூழல்களில் வாழும் மக்களின் பழக்கவழக்கங்கள் அம்மக்கள் வாழ்கின்ற சூழலமைவுக்கேற்றவாறு மாறுபடுகின்றன. பண்பாட்டு அடிப்படையில் இவ்வேறுபாடுகள் இனவரைவியலில் முக்கியத்துவம் பெறுகின்றது. சாதிய வேறுபாடுகள் மலிந்திருக்கின்ற இந்தியாவில் ஒவ்வொரு சாதிக்கும் சாதிக்குள் இருக்கும் கிளைச்சாதிகளுக்குள்ளும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. வழிபடுகின்ற தெய்வங்களை அடிப்படையாகக் கொண்டும் சடங்கு முறைகளை அடிப்படையாகக் கொண்டும் உணவு, உடை, இருப்பிடம், தொழில் போன்ற பலவற்றிலும் வேறுபாடுகள் காணப்படலாம். ஒவ்வொரு இனக்குழுவிற்குமான நடத்தைகள் அடிப்படையான சில ஒற்றுமைகளைக் கொண்டிருந்தாலும் பருண்மையான வேறுபாடுகள் காணப்படுவது இயல்பேயாகும்.

மனித வாழ்வானது நிலைமாற்றத்திற்கு உட்பட்டது. மனிதர் வாழ்வின் நிலைமாற்றத்தின் ஒவ்வொரு படிநிலையும் ஒரு சடங்கோடு தொடர்புபடுத்தப் படுகின்றன. சடங்குகள் என்பவை செயல் சார்ந்து அமைபவை. கட்டிறுக்கமான விதிகளைக் கொண்டு மக்களால் கடைபிடிக்கப்படுபவை.

பிறப்பிலிருந்து இறப்பு வரையிலான சடங்குகள் ஒவ்வொரு இனக்குழுவிலும் அல்லது சாதியிலும் நிகழ்த்தப்படுகின்றன. அதற்கான முறைமைகள் அச்சமூகத்தால் காலங்காலமாகக் கடைபிடித்து வரப்பட்டு தலைமுறைதோறும் கடத்தப்படுகிறது. நாகரிகமான சூழலிலும் கூட பழமையான நடத்தை விதிகளைக் கடைப்பிடிக்கக் காணலாம். இக்கட்டுரையானது சேலம் மாவட்டம் மேட்டூர் வட்டத்தைச் சார்ந்த செம்மனூர் என்னும் கிராமத்தில் வாழும் நகர செட்டியார் இனத்தாரின் வாழ்வியல் சடங்குகளைக் குறித்து ஆராய்கிறது.

## நகரச்செட்டியார் இனத்தார் அறிமுகம்

சேலம் மாவட்டத்தில் உள்ள மேட்டூர் வட்டத்தில் செம்மனூர் கிராமத்தில் வாழ்ந்து வரும் வியாபாரத்தை முதன்மைத் தொழிலாகக் கொண்டவர்கள் நகரச் செட்டியார்கள் ஆவர். இவர்களின் பூர்வீகமானது திருச்சி அருகில் உள்ள கண்ணனூர், மங்களம் புதூர் போன்ற கிராமங்களாகும். இங்கிருந்து வறட்சி, பஞ்சம் ஆகியவற்றின் காரணமாகப் பிழைப்பிற்காக புலம்பெயர்ந்து சேலம் மாவட்டத்திற்கு வந்தார்கள் எனக் கூறுகின்றனர். இவர்களுடைய முதன்மையானத் தொழில் வியாபாரம் செய்வதாகும். மளிகைக் கடை வைத்து வியாபாரம் செய்தலும் எண்ணெய் வியாபாரம் செய்தலும் இவ்வினத்தார் மேற்கொள்கின்ற வருமானத்திற்கான தொழில்களாகும்.

இவர்கள் நான்கு வர்ணத்தவரில் ஒன்றான வைசியர் என்றும் அழைக்கப்படுகின்றனர். உணவுப் பழக்கங்களில் பிராமணர்களைப் போல காய்கறி உணவையே கடைபிடிக்கின்றனர். மாமிச உணவினை இவர்கள் உட்கொள்வதில்லை. மேலாதிக்கக் கருத்தியலின் அடிப்படையில் உயர்நிலையாக்கம் செய்துகொள்வதைப் போல மேல் சாதியினரின் பழக்கவழக்கத்தைக் கடைபிடிப்பதன் மூலம் அவர்களைப் போலி செய்தலாகும். “பிராமணர்களுக்குக் கீழுள்ள சாதிகள் பிராமணர்களின் வாழ்க்கை முறையைப் பின்பற்றித் தங்களின் சமுதாயத் தகுதியை உயர்த்திக் கொள்ள முயல்கின்றனர். இத்தகுதிப் பிரிவில் சைவம், மது அருந்தாமை, ஆச்சாரம் மிகுந்த பிராமணர்களின் வைதிகச் சடங்குமுறைகள் ஆகியவற்றை ஏற்றுக்கொள்ளுதல் இன்றியமையாததாக உள்ளது” என்று கூறுவதற்கேற்பப் பிராமணர்களின் வாழ்க்கை முறையைப் பின்பற்றித் தங்களை உயர்நிலையாக்கம் செய்து கொள்ளும் மனப்பான்மை கொண்டவர்களாக நகரச்செட்டியார்கள் காணப்படுகின்றனர் (Bhakthavachala Bharathi, 2002).

## வாழ்வியல் சடங்குகள்

மனிதர்களின் வாழ்வு நிலைமாற்றத்திற்கு உட்பட்டதாக அமைந்துள்ளது. எனவே பிறப்பின்போதே இறப்பும் தீர்மானிக்கப்பட்டு விடுகிறது. ஒவ்வொரு நிலைமாற்றமும் சடங்கோடு தொடர்புபடுத்தப்படுகிறது. பிறப்பு, பூப்பு, திருமணம், ஆகிய நிலைமாற்றங்களில் பெண்ணுக்கானச் சடங்குகள் பெரும்பாலும் வளமைக்கானச் சடங்குகளாக அமைகின்றன. “சடங்கென்பது சிரத்தைக்குரிய வாழ்வில் குறியீட்டளவில் உந்துதலைப் பெற அல்லது நேரடியாகப் பங்கெடுத்துக் கொள்ள பொருத்தமான நடைமுறைகளுடன் தன்னார்வமாக நிகழ்த்தும் ஒருநிகழ்வாகும்” என்று சடங்கிற்கு விளக்கமளிக்கிறார் (Bhakthavachala Bharathi, 2005).

வாழ்வில் குறியீட்டுப் பொருண்மை உடைய செயல்பாடே சடங்காகும். அதாவது ஓர்மை மனதிற்கும் ஓர்மையற்ற மனதிற்குமான தொடர்பே வாழ்விற்கும் சடங்கிற்கும் உள்ள தொடர்பாகும் என்று இதனைக் குறிப்பிடுகிறார் பக்தவத்சலபாரதி. மீண்டும் மீண்டும் செய்யும் செயல்கள் காலப்போக்கில் சடங்கார்த்தமாக மாறி விடுவதைக் காணலாம். எனவேதான் அது குறியீட்டுத் தன்மையில் நிகழ்த்தப்படுவதாக அமைகிறது. வளமைக்கான சடங்குகள் பூப்பு, திருமணம் என்பவை மகிழ்ச்சியான சூழலில் இனிப்பான உணவுகளைப் பங்கிட்டு நடத்தப்படுகிறது. மகிழ்வைக் கொண்டாடும் வகையில் அச்சடங்குகளும் அமைகின்றன.

பெண்ணைச் சுற்றியே பெரும்பாலும் வாழ்வியல் சடங்குகள் அமைகின்றன. “பெண் உடல் ரீதியாகக் குழந்தைப் பருவத்திலிருந்து கருத்தரிக்கும் தகுதியை அடைகிற நிலைக்கு மாறிச்

செல்வதைக் குறிப்பது பூப்பு. இது முதல் நிலை பெண் ஓர் ஆண் மகனுக்குரிய குழந்தைகளைக் கருத்தரிக்கும் நிலைக்குமாறிச் செல்வதைக் குறிப்பது வதுவை. இது உடலை மையமாகக் கொண்டு பெண்ணை ஒரு குடும்ப நிறுவனத்திற்குள் செரிக்கின்ற சமூக நிகழ்வாகும். குடும்பத்திற்குள் தன் கணவனுக்கே பெண் கருத்தரிக்கும் உடற்கூற்று செயல்பாடே கருவுயிர்த்தல் என்று குறிப்பிடுகிறார்கள்" என்று கூறுகிறார் (Raj Gowthaman, 2006). நகரஇனத்தார் எனபடும் வைசியச் செட்டியார்களின் வாழ்வில் இது போன்ற வாழ்வியல் சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன என்பதைக் கள ஆய்வில் அறிந்து கொள்ள முடிந்தது.

## பிள்ளைப்பேறு

உடைமைச் சமூகத்திற்கு வாரிசு இன்றியமையாததாகும். "கற்பிற் சிறந்த பெண்கள் சமுதாய வாழ்க்கைக்கு வரந்தரும் பிள்ளைகளைப் பெற்று கணவனுடனும் பிள்ளைகளுடனும் இன்புற்று வாழ்ந்தனர்" என்ற கூற்றின்படி குழந்தைச் செல்வம் கற்புடை பெண்டிர்க்கு இன்றியமையாததாகும் (Vithiananthan, 2014). செட்டியார் இன மக்கள் திருமணமானப் பெண்கள் தாய்மை அடைந்து விட வேண்டும்என்பதில் கவனங்கொள்கின்றனர். குழந்தையின்மை என்பது பெண்களுக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் என்பதால் அதற்கான முயற்சிகளை அவர்கள் மேற்கொள்கிறார்கள். அரசமரத்தைச் சுற்றிவருதல், நேர்த்திக்கடன் செய்தல் போன்றவற்றால் குழந்தை பிறப்பு ஏற்படும் என நம்புகின்றனர். "அரசமரத்தைச் சுற்றி வந்து அடிவயிற்றைப் பார்த்தாளாம் "என்னும் சொலவடை அம்மக்களிடம் அரசமரத்தைச் சுற்றினால் குழந்தை கருவுயிர்க்கும் என்னும் நம்பிக்கை கொண்டிருப்பதைக் காட்டுகிறது. அது போல பாம்புப் புற்றை வணங்குவதும் பிள்ளைப்பேற்றுக்கு வழிவகுக்கும் என்று நம்புகிறார்கள்.

## சேனை வைத்தல்

குழந்தை பிறந்ததும் சேனைத் தொட்டு வைத்தல் என்னும் சடங்கினைச் செய்தவதாக நகர இனத்தாரின் பெண்ணின் மூலம் அறியமுடிந்தது. "குழந்தை மருத்துவமனையில் பிறந்தாலும் வீட்டில் பிறந்தாலும் வெதுவெதுப்பான வெந்நீரில் கரைத்தச் சர்க்கரை அல்லது தேனைத் தொட்டுக் குழந்தையின் நாவில் வைப்பார்கள். இதற்குச் சேனை ஊட்டுதல் என்று பெயர் ஆகும். தாய், தந்தை, அவர்களுடைய உறவினர்கள், ஊரின் முதன்மையான நபர், நன்றாக வாழ்ந்த கைராசிக்காரர், சிறந்த கல்வியாளர் போன்றோரில் யாரேனும் ஒருவர் சேனை ஊட்டுவார். குழந்தை பிறந்து குளிப்பாட்டிய பின்னர் இச்சடங்கினைச் செய்கின்றனர்" என்று குறிப்பிடுகிறார் (Informer; Meena, Chemmanur). குழந்தைக்குச் சேனைவைத்தல் பண்டைத்தமிழரின் வழக்கமாகவும் இருந்திருக்கிறது. குழந்தை முதன் முதலாகச் சுவைக்கும் பானம் இனிப்பாக இருத்தல் அக்குழந்தையின் எதிர்காலம் இனிப்பைப் போல இன்பமாக இருக்கும் என்பதால் இச்சடங்கு நிகழ்த்தப்படுகிறது எனலாம்.

## அரைநாண் கயிறு கட்டுதல்

குழந்தை பிறந்த பின்னர் சேனைவைத்தல் சடங்கு முடிந்ததும் அரைநாண் கயிறு கட்டும் சடங்கினை நகர இன மக்கள் செய்கின்றனர். குழந்தை பெற்றத் தாய்க்கு ஓமம் எரித்து ஊற்றுதல் அல்லது தீட்டுக்க ழித்தல் என்னும் நிகழ்ச்சியின் போது எருக்க நாரினால் ஆன அரைஞாண் கயிற்றினை குழந்தையின இடுப்பில் கட்டுகின்றனர். இச்சடங்கினைக் குறித்து நகர இனத்துத் தகலாளி கூறுகிற செய்தியானது "எருக்கஞ் செடியினை வெயிலில் உலர்த்தி, மேல் தோலை நீக்கி உள்ளிருக்கும் நாரினைக் கயிறாகத் திரித்து, அக்கயிறினை குலதெய்வத்தை மனதில் நினைத்து எவ்விதத் தீங்கும் குழந்தையை நெருங்கக் கூடாது என்றும் நோய்கள் வரக்கூடாது என்றும் வேண்டிக் கொண்டு இடுப்பில் இரட்டைப் படையாகக் கட்டுகின்றனர். இந்த அரைஞாண் கயிறானது குழந்தையின் இடுப்பில் மூன்று மாதங்கள் இருக்கும். அதன் பின்னர் நூலினால் தயாரிக்கப்படும் சிவப்பு, கறுப்பு நிற அரைஞாண் கயிறுகளை தங்கள் குலதெய்வங்களுக்கு ஏற்பக்கட்டுகின்றனர்.

மேலும் எருக்கம் செடியினால் ஆன நாரினைக் கொண்டு அரைஞாண் கயிறுகட்டுவதால் இடுப்பில் வரும் சிறு கட்டிகளைக் குணமாக்கும் என்றும் பூச்சிக்கடி போன்றவற்றிலிருந்து குழந்தையைப் பாதுகாத்துக் கொள்ளமுடியும் என்றும் தகலாளி தெரிவித்தார் (Informer; Karuppasamy, Sengattur) நகரஇன மக்கள் குழந்தை பிறந்ததும் சேனை தொட்டு வைப்பது போலவே அரைஞாண் கயிறு கட்டுதல் என்னும் சடங்கினையும் நிகழ்த்துகின்றனர். தாய்க்குத் தீட்டு கழித்ததும் குழந்தைக்கு எருக்கஞ் செடியினில் திரிக்கப்பட்ட கயிற்றினை கட்டி சடங்கு நிகழ்த்துகின்றனர். மூன்று மாதத்திற்கு குழந்தையின் இடுப்பில் இருக்கும் இக்கயிற்றின் அறிவியல் பூர்வபயன்கள் கருதியே இவ்வாறு செய்கின்றனர் எனக் காணமுடிகிறது.

## கைக்காப்பு அணிவித்தல்

நகர இனத்தார் பிறந்த குழந்தைக்கு அரைஞாண் கயிறு கட்டும் நிகழ்வின் போதே கைக்கு காப்பு அணிவிக்கும் வழக்கத்தினையும் மேற்கொள்கின்றனர். வசம்பினைத் தோல்நீக்கி உருளை வடிவில் செய்து வட்ட வடிவில் சிறு சிறு துண்டுகளாக வெட்டுகின்றனர். அதனை ஊசியினால் நூலில் கோர்த்து இரண்டு கைகளிலும் கட்டுகின்றனர். வசம்பினால் செய்த இக்காப்பானது குழந்தை அடிக்கடி வாயில் கையை லாயில் வைக்கும் போது நோய்த்தொற்றுக்கள் ஏதேனும் ஏற்படாமல் இருக்க இவ்வாறு செய்கின்றனர் எனலாம். இது குறித்து நகர செட்டியார் இனத்தைச் சேர்ந்த தகவலாளி கூறிய கருத்தானது "இதுகுழந்தையின் வயிற்று வலியைக் குணப்படுத்தும் சிறந்த பொருளாகும். அதனால் இது பிள்ளை வளர்ப்பான் என்று கூறப்படுகிறது. பிறந்த குழந்தைகளுக்கு இந் வசம்பை கையில் காப்புபோல் கட்டுவதால் குழந்தையின் வயிற்றில் ஏற்படும் வாயுத்தொல்லை வேறு பல வயிற்றுப் பிரச்சினைகள் ஏற்படாமல் பாதுகாக்கிறது" என்றுகூறினார் (Informer; Palaniswami, Sentharamakadai).

## பூப்புச்சடங்கு

வாழ்க்கை வட்டச் சடங்குகளில் வளமைச் சடங்காகக் கருதப்படுவது பூப்புச் சடங்காகும். பெண் கருவுயிர்த்தலுக்கு தயாராகும் நிகழ்வாக இது சமூகத்தினரால் கருதப்படுகிறது. பூப்பினை தீட்டாகவும் வளமைக்கான குறியீடாகவும் கருதும் போக்கும் பல்வேறு சமூகங்களில் காணப்படுகிறது. பூப்பெய்திய பெண்ணைத் தீட்டானவள் என்று தனிக்குடிசையில் வைப்பதை சில சமூகங்கள் வழக்கத்தில் கொண்டிருக்கின்றன. பூப்புச் சடங்குகள் முறைப்படி நிகழ்த்தப்பட்டு தீட்டுக் கழிக்கப்படுகிறது. "பூப்பெய்திய பெண்ணைத் தனிக் குடிசையொன்றில் சிலநாட்கள் தனித்திருக்கச் செய்து பின்னர் தங்களுடன் சேர்த்துக் கொள்ளும் பழக்கம் தமிழ்நாட்டுப் பழங்குடிகள் பலரிடமும்… உள்ளது. பூப்பெய்திய பெண்ணை வீட்டில் ஒரு புறமாகச் சில நாட்கள் ஒதுக்கி வைக்கும் பழக்கம் பலசாதியினரிடமும் இன்றும் நிலவுவது நாமறிந்ததே. பூப்பெய்திய பெண்ணை மீண்டும் குடும்பத்துடன் இணைத்துக் கொள்ளும் முன்னர் சடங்கு ஒன்று நிகழ்த்தப்படும். இதுவே பூப்புச் சடங்காகும் என்று குறிப்பிடுகிறார் (Sivasubramanian, 2005). இவ்வாறு பூப்புச்சடங்கு நகரச்செட்டியார் இனமக்களிடமும் காணப்படுகிறது.

சேலம் மாவட்டம் செம்மனூர் கிராம நகர செட்டியார்கள் பெண் பூப்பெய்தியவுடன் அப்பெண்ணின் பெற்றோர் முதலில் தாய்மாமனுக்கு வெற்றிலை பாக்கு, பூ, பழம் குங்குமம் கொடுத்து மரியாதையுடன் பூப்பெய்திய செய்தி கூறப்படுகிறது. பின்னர் நெருங்கிய உறவினர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது. பூப்புச் சடங்கிற்கானத் தண்ணீர் ஊற்றுதல் என்னும் சடங்கு நிகழ்த்தப்படுகிறது. அந்நேரத்தை பஞ்சாங்கம் பார்த்து கணிக்கின்றனர். இது குறித்து "நகரஇன மக்கள் பூப்பெய்தி பெண்ணிற்கு தண்ணீர் ஊற்றும் சடங்கின் போது சல்லடையில் நகைகள் வைத்து பூப்பெய்திய பெண்ணின் தலை மீது வைத்துச் சுற்றுகின்றனர். இந்நிகழ்வில் கற்புடை பெண்டிர் என்று கூறத்தக்கப் சுமங்கலிப் பெண்கள் ஒற்றைப்படையில் பங்கு பெறுகின்றனர். பின்பு பூப்பெய்திய பெண்ணிற்கு உளுந்தங்களி, கஞ்சி, போன்ற ஊட்டமுள்ள உணவு வழங்கப்படுகிறது. உணவு கொடுப்பதற்கு முன் பழைய சோற்று நீரில் நல்லெண்ணெய் சிறிதளவு கலந்து பூப்பெய்திய பெண்ணிற்குக் கொடுக்கின்றனர். பதினோராம் நாள் மஞ்சள், சந்தனம் சாற்றி வீட்டிற்குள் அனுமதிப்பர். பின் பிராமணர்கள் வந்து புண்ணிய தானம் செய்து தீட்டுக் கழிப்பர். அதன் பின்னர் உறவினர்களுக்கு விருந்து நடைபெறும்"

என்று நகர இனத்தைச் சார்ந்த தகவலாளி தெரிவித்தார் (Informer; Vellaiyammal, Kadaneri). பல்வேறு சமூகங்களிலும் காணப்படும் தீட்டுக் கழித்தல் என்னும் சடங்கு இவர்களது குடும்பங்களிலும் நிகழ்த்தப்படுகிறது என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

## திருமணச்சடங்கு

குடும்ப அமைப்பிற்கு இன்றியமையாத நிகழ்வாக திருமணம் அமைகிறது. பல்வேறு சமூகங்களில் திருமண முறைகள் வேறுபட்டுக் காணப்படுகின்றன. தொல்காப்பியர் குறிப்பிடும் கற்புமணம், களவுமணம் இரண்டும் சமூகங்களில் நடைபெற்றாலும் கற்புமணத்தில்தான் சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன என்பதைக் காணமுடிகிறது. அகம்.86, 136 ஆகிய இரு பாடல்கள் திருமணம் பழந்தமிழ்ச் சமூகத்தில் நடைபெற்ற முறையை விவரிக்கின்றன. தமிழ்ச் சமூகத்தில் திருமண முறைகள் குறித்தப் பல்வேறு செய்திகள் காணப்படுகின்றன.

எண்வகை மணங்கள் தொல்காப்பியத்தில் கூறப்பட்டாலும் பெரியோர் மன்றலில் கூடி கொடுப்பவரும் பெறுபவரும் முறைப்படி பேசி ஆண், பெண் இருவரையும் மணமுடித்து வைத்தலே பெரும்பான்மையாக நடைபெறுகிறது. “திருமணம் என்பது மனிதனுக்காக மனிதனால் நடத்தப்படும் ஒரு வகைச்சடங்கு என்பர்” சமூகத்தில் இன்றியமையாத நிகழ்வாக திருமணம் குறிக்கப்படுகிறது (Gandhi, 2008). தொல்காப்பியத்தில் கரணம் என்று திருமணம் குறிப்பிடப்படுகிறது. “இளம்பூரணர் கரணம் என்பதற்கு கரணம் என்றே பொருள் தந்தார். நச்சினார்க்கினியர் இதற்கு வேள்விச் சடங்கு எனப் பொருள் கூறியுள்ளார்” என்று குறிப்பிடுவதிலிருந்து திருமணம் ஒரு சடங்காக தமிழ்ச் சமூகத்தில் நிகழ்த்தப்பட்டு வந்தமையை அறியலாம் (Selvaraj, 2016). நகர இனத்தாரிடமும் திருமணச் சடங்குகள் காணப்படுகின்றன. “திருமணத்திற்கு முன்பே மணப்பெண்ணின் தாய்மாமன் வீட்டில் பலகையில் அமர வைத்து தலைக்கு நல்லெண்ணெய் தேய்த்து குளிக்க வைக்கின்றனர். பின்பு மஞ்சள், சந்தனம், பூசி நலுங்கு வைக்கின்றனர். கண்ணாடி வளையல்கள், மெட்டி ஆகியனவற்றை அப்போதே அணிவிக்கின்றனர்.

திருமணம் முடிந்த பின் கோவிலுக்கு அழைத்து செல்கிறார்கள். மணமகன் வீட்டிற்குச் சென்று பாலும், பழமும் உண்ணக் கொடுக்கின்றனர் என்று திருமணம் நடைபெறும் போது செய்யப்படும் சடங்குகள் குறித்துக் கூறுகின்றார் தகவலாளி (Selvaraj, 2016). பல்வேறு சமூகங்களில் காணப்படும் திருமண முறைகளைப் போலவே நகர இனத்தார் திருமணச் சடங்குகளும் காணப்படுகின்றன எனலாம்.

## வளைக் காப்புச் சடங்கு

பெண் கருவுயிர்த்தலையும் மகிழ்ச்சியாகக் கொண்டாடுவதற்கானச் சடங்காக வளைகாப்புச் சடங்கு காணப்படுகிறது. பொதுவாக கருவுயிர்த்த ஏழாம் மாதத்தில் இச்சடங்கு நிகழ்த்தப்படுகிறது. செம்மனூர் நகரச் செட்டியார்கள் இந்நிகழ்வை சீமந்தம் என்றும் அழைக்கின்றனர். கருவுற்ற ஏழாம் அல்லது ஒன்பதாம் மாதத்தில் நிகழ்த்துகின்றனர்.

இச்சடங்கினை நிகழ்த்துவது குறித்து தகவலாளியிடம் கேட்டறிந்த செய்தி “பெண்ணின் தாய்வீட்டார் சீர்வரிசையுடன் வந்த பின்பு சடங்குத் தொடங்கப்படுகிறது. வளைகாப்புச் சடங்கின்போது காமாட்சியம்மன் குத்துவிளக்கு, முக்காளி போன்ற பொருட்கள் இடம்பெறுகின்றன. கருவுற்ற பெண்ணிற்கு தன்தாய்வீட்டில் இருந்து ஏழு அல்லது ஐந்து வகை உணவு சமைத்து எடுத்து வருவர்தன் பின் கருவுற்ற பெண்ணை ஒப்பனைகள் செய்து மணமகனுடன் அமர வைக்கப்படுவாள். இவ்விருவரையும் சடங்கிற்கு வந்தோர் வாழ்த்தி பெண்கள் கருவுற்ற பெண்ணிற்கு கையில் வளையல் அணிவித்து விடுவார்கள். வளையல் அணிவிக்கும் போது பெண்ணின் கன்னம், கைகளில் சந்தனம் தடவுவர். அதன் பின்தாய் வீட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட ஏழுவகை உணவினை உண்ணத்தருவர். பின்பு நிகழ்விற்கு வந்தோர் அனைவரும் உணவு உண்பர். அப்பெண்தாய் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்படுகவார்கள் குழந்தை பிறந்த பின்னர் மீண்டும் கணவன் வீட்டிற்கு அழைத்து வரப்படுவாள்”

(Informer; Ramaye, Pottaneri). இவ்வாறு வளைகாப்புச் சடங்கு நிகழ்த்துவதைக் குறித்து அச்சமூகத்தினர் குறிப்பிடுகின்றனர்.

## முடிவுரை

சடங்குகள் மனித வாழ்வில் செயல் சார்ந்து நிகழ்த்தப்படும் வாழ்வியல் செயல்பாடாகக் காணப்படுகிறது. இறுக்கமான விதிகளைக் கொண்டதாகச் சடங்குகள் காணப்படுகின்றன. பிறப்பு முதல் இறப்பு வரையிலான நிலைமாற்றங்கள் சடங்கோடு தொடர்பு படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு சமூகத்திற்கும் குறிப்பிட்ட சடங்குமுறைகள் காணப்படுகின்றன. வாழ்வியல் சடங்குகள் பொதுவாகப் பெண்ணை மையமிட்டதாக அமைகின்றன. சேலம் செம்மனூர் பகுதியில் வசிக்கும் நகரச் செட்டியார்களின் வாழ்வியல் சடங்குகள் கடைபிடிக்கும் முறைமைகள் பல்வேறு சமூகங்களில் கடைபிடிக்கின்ற வகையில் காணப்பட்டாலும் குழந்தைப் பிறப்பு, சேனைவைத்தல், பூப்பு, திருமணம் போன்ற செயல்பாடுகளில் சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன.

இச்சமூகத்திற்கென சில தனித்தப் பண்புகள் இச்சடங்கு நிகழ்வுகளில் காணப்படுகின்றன. அரைஞாண் கட்டுதல் அதற்கான சடங்குகள் நிகழ்த்தப்படுதல் பேறுகாலமான பெண்ணிற்கு தீட்டுக்கழித்தல் பூப்பெய்திய பெண்ணிற்கு பிராமணர்களைக் கொண்டு சடங்கு செய்தல், திருமணச் சடங்குகள், வளைகாப்புச் சடங்குகள் செய்தல் என இவர்கள்கடைபிடிக்கின்றனர். கள ஆய்வின் மூலம் இச்சமூகத்தினர் கடைபிடிக்கும் சடங்கு முறைகளில் மனிதனின் வளர்நிலைகளில் உள்ள நிலைமாற்றத்தின் போதான சடங்குகள் நிகழ்த்தப்படுவதை அறியமுடிகிறது.

## Reference

Bhakthavachala Bharathi, (2002) Tamilar Manidaviyal, Adaiyalam Publications, Trichy, India.

Bhakthavachala Bharathi, (2005) Manidaviyal Kotpaadugal, Vallinam pathipagam, Pudhucheery, India.

Gandhi, M., (2008) Thamizhar Pazhakka Vazhakkangalum Nambikkaigalum, International Institute of Tamil Studies, Chennai, India.

Informer- Karuppasamy, M., Age-60, Sengattur, Tamil Nadu, India.

Informer- Meena, S., Age-40, Chemmanur, Tamilnadu, India.

Informer- Palaniswami, Age-60, Sentharamakadai, Tamil Nadu, India.

Informer- Ramaye, M., Age-65, Pottaneri, Tamil Nadu, India.

Informer- Vellaiyammal, M., Age-55, Kadaneri, Tamil Nadu, India.

Raj Gowthaman, (2006) Paatum Thogaiyum Tholkappiyamum Thamizhs Samuga Uruvakamum, Tamizhini Pathippagam, Chennai, India.

Selvaraj, Silambu N., (2016) Tholtamizhar Thirumanamuraikal, Kalachuvadu Pathippagam, Nagercoil, India.

Sivasubramanian, A., (2005) Adithala Makal Varalaru, New Century Book House, Chennai, India.

Vithiananthan, S., (2014) Tamilar salbu, Kumaran Pathippagam, Sri Lanka.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License